# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 57/2025

Deposition of LW3 Examined as PW3 Dt. 08.06.2026

| | |
|---|---|
| Name | கோகுலகிருஷ்ணன் |
| Father Name | கண்ணன் |
| Village Name | கோழிகுத்தி |
| Age | 24/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day08.06.26.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா. 1 எனது சித்தி ஆவார். 02.10.2024 ஆம் தேதி மதியம் 1.00 மணியளவில் எதிரிகள் வந்து பிரச்சனை செய்வது சம்பந்தமாக அ.சா2 போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான்கைந்து அடிஆட்களை அழைத்து வந்து எதிரிகள் 2 போரும் அங்கு குடியிருக்க போவதாக சொல்லி அ.சா.1 யை வெளியேறும் படியும் பிரச்சினை செய்வதாக சொன்னார்கள். அதன்பிறகு நான் வீட்டில் இருந்து வருவதற்குள் குத்தாலம் போலிசாருக்கு தகவல் கிடைத்து அவர்கள் அங்கு வந்து விசாரணை செய்தார்கள். வழக்கு நிலுவையில் இருக்கும் போது பிரச்சினை செய்யாதீர்கள் என்று சொல்லி சென்றார்கள். ஆனால் எதிரிகள் பொருட்களை வெளியே போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் எனது வீட்டிற்கு சென்ற பிறகு 4 மணியளவில் எனது அத்தை போன் மூலமாக அ.சா. 1 பினாயில் குடித்து விட்டார் என்று தகவல் சொன்னார்கள். நான் வீட்டிற்கு சென்றேன் அப்பொழுது ஆம்புலன்ஸ் வந்தது. நானும், எனது அத்தையும் அ.சா.1 யை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ஒருவாரம் சிகிச்சையில் இருந்தார். . இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

நீதித்துறை நடுவர் எண் 1
மயிலாடுதுறை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 57/2025

Deposition of LW2 Examined as PW2 Dt. 08.06.2026

| | |
|---|---|
| Name | வளர்மதி |
| Husband Name | ரமேஷ் |
| Village Name | சுவாமி மலை |
| Age | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day08.06.26.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தஞ்சாவூர் மாவட்டம் சுவாமி மலையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி எனது தம்பி ஆகும். 2ம் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 அனிதா எனது தம்பி 1ம் எதிரியின் மனைவி ஆவார். அ.சா.1 க்கு கடந்த 2010 ம் வருடம் எனது தம்பி 1ம் எதிரியுடன் திருமணம் ஆனது. அவர்களுக்கு 2 பெண் குழந்தைகளுடன் சோழன்பேட்டை வடுகத் தெருவில் வாழ்ந்து வந்தனர். கடந்த 2024 ஆம் ஆண்டு எனது தாயாருக்கு கால் உடைந்து விட்டது. அம்மாவை பார்ப்பதற்காக நான் வந்திருந்தேன். அப்போது எதிரிகள் இருவரும் வடுகன் தெரு. சோழன் பேட்டையில் உள்ள அ.சா. 1 ன் வீட்டிற்கு மதியம் 1.00 மணிக்கு__எதிரிகள் இருவரும் துணிமணி பைகளுடன் வந்து ஆ.சா.1 யை நீ இந்த வீட்டில் இருக்கள் கூடாது வெளியே போ என்று கூறி அ.சா. 1 யை அடித்தார்கள். குழந்தைகள் சத்தம் போட்டார்கள். அ.சா. 1 2ம் எதிரியை அழைத்து வந்து பிரச்சினையின் காரணமாக மனஉளைச்சலுக்கு உள்ளாகி பினாயிலை குடித்து விட்டார்கள். நான்தான் 108 ஆம்புலன்ஸ் மற்றும் அண்ணன் மகனுக்கு போன் மூலம் தகவல் சொன்னோம். பிறகு நானும் கோகுலகிருஷ்ணனும் அ.சா1 யை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தோம். அப்பொழுது வீட்டில் இருந்த குழந்தைகளையும் வெளியே தள்ளி வீட்டை பூட்டி விட்டார்ள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

R. வளர்மதி

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, சாட்சியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு [illegible] சரியானதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

8.6.26

நீதித்துறை நடுவர் எண் 1

மயிலாடுதுறை.